மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணையை யார் வேண்டுமானாலும் பார்வையிடலாம். நூற்றுக்கணக்கான பயணிகள் போய் பார்க்கிறார்கள். அவர்களிலே ஒருவராக அந்த வழக்கறிஞர்களும் போகலாம். யார் பார்த்தாலும் சரி, கேரளத்தினுடைய அமைச்சர்கள் பார்த்தாலும் சரி, கேரளத்திற்காக நீதிமன்றத்திலே வாதாடுகிற வழக்கறிஞர்கள் பார்த்தாலும் சரி, ஏன் அந்தத் தீர்ப்பைக் கொடுக்கிற நீதிபதிகளே வந்து பார்த்தாலும் சரி, பார்க்கட்டும், நம்மிடத்திலே ஒளிவுமறைவு இல்லை. அணை பலமாக இருக்கிறது என்பதை ஆயிரம் மேடைகளிலே சத்தியம் செய்து நிரூபிப்பதற்குத் தமிழக அரசு தயாராக இருக்கிறது.

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 204, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பெ. துரைசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

204—

மருத்துவக் கல்லூரி

***28691—மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், நாமக்கல்லில் மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், நாமக்கல்லில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2008 மே 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பெ. துரைசாமி.

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையிலும், மருத்துவக் கல்லூரி படிப்பிலும் மகத்தான சாதனைகளை நிகழ்த்துகின்ற வகையில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றபோது, 2006 ஆம் ஆண்டு மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், இதுவரை விழுப்புரம், திருவாரூர், தருமபுரி, சிவகங்கை, பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரி அமைக்க முடிவெடுத்து, அதை நிறைவேற்றிக் கொண்டு வருகிறார்கள். நாமக்கல் மாவட்டம், தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகம் வாழ்கின்ற ஒரு மாவட்டமாகும். அனைத்துத் துறைகளிலும் மிக வேகமாக வளர்ந்து வருகின்ற ஒரு மாவட்டமாக திகழ்ந்துகொண்டிருக்கின்றது. மாணவ, மாணவியர் தங்கள் மேல்நிலைக் கல்வியை முடித்த பிறகு வெளி மாவட்டங்களுக்குச் சென்று மருத்துவக் கல்வியைத் தொடர வேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலும், தனியார் மருத்துவக் கல்லூரிகளிலே அதிக நிதி கொடுத்து, கல்வியைத் தொடர வேண்டிய சூழ்நிலை இருப்பதினாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அடுத்த ஆண்டிலாவது நாமக்கல் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி அமைய நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆண்டுதோறும் புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படும் என்று அறிவித்தார்கள். அனைத்து மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரி தொடங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். இதுவரையில், இரண்டு ஆண்டுகளில் 5 மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வருகின்ற ஆண்டில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை முதல்வரிடம் எடுத்துக்கூறி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2008 மே 6

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பெ. துரைசாமி.

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரி அமைய எவ்வளவு ஏக்கர் நிலம் தேவைப்படுகிறதோ, அவ்வளவு ஏக்கர் நிலம் தயாராக இருக்கிறது. நாமக்கல் மாவட்டம் தமிழகத்திலேயே ஒரு சிறந்த கல்வி மாவட்டமாக அழைக்கப்படுகின்ற அளவிற்கு தனியார் பள்ளிகளைக்காட்டிலும் அரசு மேல்நிலைப் பள்ளிகள், இன்னும் சொல்லப்போனால், களங்காணி என்ற கிராமத்தில் ஆதி திராவிடர் நலத் துறையால் நடத்தப்படுகின்ற பள்ளியில் பயில்கின்றவர்கள்கூட நூற்றுக்கு நூறு சதவிகிதம் தேர்ச்சி பெறுவதோடு 1,100-க்கு மேல் அதிக மதிப்பெண் பெறுகின்றவர்களாக நாமக்கல் மாவட்ட மாணவ, மாணவியர் உள்ளனர். அந்த மாணவர்களை ஊக்கப்படுத்துகின்ற வகையில், ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி, நாமக்கல் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி அமைய முன்னுரிமை வழங்கப்படுமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டத்தில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் வாங்குகிறார்கள். அது முட்டை வழங்குகிற மாவட்டம். (சிரிப்பு) முட்டை வாங்காமல் மாணவர்கள் நூற்றுக்கு நூறு மதிப்பெண் வாங்கியிருக்கிறார்களே, அதற்குப் பாராட்டு.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், சேலத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி இயங்கிக் கொண்டிருக்கிறது. சேலத்துக்கும் நாமக்கல்லுக்கும் வெகு தொலைவு இல்லை. குறுகிய தூரம்தான் இருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை முதல்வரிடம் எடுத்துக்கூறி பரிசீலிக்கப்படும் என்று மீண்டும், மீண்டும் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. புஷ்பராஜ்.

திரு. செ. புஷ்பராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்ட மருத்துவக் கல்லூரி கட்டடப் பணிகள் எப்போது தொடங்கப்படும்? அதன் மதிப்பீடு எவ்வளவு? பணி முடியும் காலம் எப்போது என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

2008 மே 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்பட இருக்கின்ற பணிகள் தற்சமயம் நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிற காரணத்தால் உடனடியாக ஆரம்பிக்க முடியவில்லை. வெகு விரைவில் நீதிமன்றத்தில் இருக்கின்ற வழக்கு முடிவுற்றதும் கட்டடங்கள் கட்டுவதற்கு ஆணையிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் ஏற்று தட்டாமல் நிறைவேற்றித் தருகின்ற மத்திய சுகாதாரத் துறை அமைச்சராக டாக்டர் அன்புமணி அவர்கள், எங்கள் சின்ன அய்யா அவர்கள் இருக்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு கடலூர் மாவட்டத்தில், கடலூரில் ஒரு மருத்துவக் கல்லூரி கொண்டு வருவதற்கு ஆவன செய்வார்களா? அதற்கான இடம் கேப்பர்கோரையிலே தேர்வு செய்யப்பட்டு இருக்கிறது. இதுவரை 5 கல்லூரிகளைத் தமிழகத்திற்குத் தந்த மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள், அவருடைய ஆட்சிக் காலத்திலே எங்கள் கடலூர் மாவட்டத்திற்கும் ஒரு மருத்துவக் கல்லூரியை வரும் ஆண்டிலே அறிவிப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அமைச்சரிடம் கேட்டு அமைகிறேன்.

முற்பகல் 9-50

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இரண்டாண்டு காலத்தில் ஐந்து புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்குவதற்கு ஆணையிட்டுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை முதலமைச்சரிடம் எடுத்துக்கூறி, வருகின்ற ஆண்டில் அவருடைய அனுமதிபெற்று, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2008 மே 6

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தின் மத்தியப் பகுதியான கரூர் மாவட்டத்தில் அரசு மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் திருச்சிக்கு அருகில் இருக்கின்றது. திருச்சியிலே ஒரு மருத்துவக் கல்லூரி இருக்கின்ற காரணத்தால், கரூருக்கு அவசியமில்லை என்று கருதப்படுகிறது. அதனால் தற்சமயம் பரிசீலிக்கும் கருத்துரு அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலையில் இந்த ஆண்டே மருத்துவக் கல்லூரி அமைக்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை வேலூருக்கு அருகில் இருக்கிற காரணத்தால் இந்தக் கருத்துரு எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 205, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.